இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 30-09-2025

# ‘வர்றேன்’ என்றவர் ஓடினார்!

எந்தக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காமல், தான்தோன்றித்தனமாக, அராஜகத்தை வழக்கமாகக் கொண்டு நடிகர் விஜய் தரப்பால் நடத்தப்பட்ட கூட்டத்தில் சிக்கி 39 உயிர்கள் பரிதாபமாக இறந்துள்ளன.

**இந்த நாட்டில் இலட்சக்கணக்கானவர்கள் ஒரே இடத்தில் கூடிய பல மாநாடுகள் நடந்துள்ளன. இலட்சக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கும் கோவில் திருவிழாக்கள் நடந்துள்ளன. அங்கெல்லாம் நடைபெறாத விபத்து, இது போன்ற வேன் பரப்புரையில் நடந்ததற்கு என்ன காரணம்? இக்கூட்டத்தை நடத்தியவர்களின் பொறுப்பற்ற தன்மையும், தன்னை ஏதோ பெரிய அவதாரமாகக் காட்டிக் கொள்ளும் ஆணவ எண்ணமும்தான் இத்தகை உயிர்களைக் குடித்துள்ளது. தனது சுயநலத்துக்காக சொந்தக் கட்சிக்காரர்களை, ரசிகர்களை அந்த விளம்பர வெறி தின்றுள்ளது.**

அசம்பாவிதம் நடந்து விடக் கூடாது என்று பார்ப்பது காவல் துறையின் கடமை மட்டுமல்ல, நிகழ்ச்சி நடத்துபவர்களுக்கும் அந்த பொறுப்பு வேண்டும். அதனால் தான் மாநாடுகளை, பொதுக்கூட்டங்களை நடத்துபவர்கள் அவ்வளவு முன்னெச்சரிக்கைகளைச் செய்கிறார்கள். கூட்டத்துக்கு, மாநாட்டுக்கு வரும் தொண்டர்களை முதலில் மதித்து, அவர்களுக்கான இருக்கைகளை, தேவைகளைச் செய்வது என்பது கூட்ட ஏற்பாட்டாளர்களின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

காவல் துறை, கட்டுப்பாடுகள் போடுவது அடக்குமுறையாக அல்ல, அசம்பாவிதம் நடந்துவிடாமல் பார்த்துக் கொள்வதற்காகத்தான். இந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் ஆளும் கட்சிக்கும் போடப்படுகிறது. மாநிலத்தை ஆளும் தி.மு.க.வும், ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க.வும் நடத்தும் கூட்டங்களும் முறையான அனுமதி பெற்றே நடத்தப்படுகிறது. பிரதமர் வந்தாலும், முதலமைச்சர் வந்தாலும் இதே கட்டுப்பாடுகள்தான் விதிக்கப்படுகிறது.

ஆனால் ஏதோ தனக்கு மட்டும் இப்படி கட்டுப்பாடுகள் விதிப்பதாக விஜய், பொய் சொன்னார். கட்டுப்பாடுகளைப் போட்டால், ‘பயந்துவிட்டீர்களா?’ என்று அவரே உளறிக் கொள்கிறார். நெருக்கமான தெருக்களைக் குறி பார்த்து கேட்கிறார்கள். குறைவான ஆட்கள் வந்தாலும் நிறைய வந்தது போல காட்ட நினைக்கிறார்கள். பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத, பெரிய சாலைகளைக் கொடுத்தால் வாங்க மறுக்கிறார்கள். அங்கே கூட்டம் கூட்டிக் காட்ட முடியாது அவர்களால்.

**காலையில் 8.45 வருவதாக அறிவித்து மதியம் 3 மணிக்கு நாமக்கல்லுக்கும், மதியம் 12 மணிக்கு வருவதாகச் சொல்லி இரவு 7 மணிக்கு கரூருக்கும் வந்துள்ளார் விஜய். தனது ரசிகர்கள் பசியோடு காத்திருப்பதைப் பார்க்கும் குரூர** மனோபாவம் இது. இவைதான் இந்த மாபெரும் பேரழிவுக்குக் காரணம்.

தனக்கும் கட்டுப்பாடு கிடையாது, அரசாங்க கட்டுப்பாட்டுக்கும் அடங்க மாட்டேன் என்று நினைப்பவர்கள் நீதிமன்றங்களுக்காவது அடங்கி இருக்க வேண்டும். விஜய் கட்சி சார்பில் ஒரு நபர், உயர்நீதிமன்றத்தில் வழக்குப் போட்டார். நாங்கள் அனுமதி கேட்கும் போது பாரபட்சம் இல்லாமல் அனுமதி தர வேண்டும் என்று கேட்டார். **“கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வரக்கூடாது என நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அவர்களை வர வேண்டாம் என நாங்கள் எப்படி சொல்ல முடியும்?”** என விஜய் வக்கீல் கேட்டார்.

**“இது போன்ற நிபந்தனைகள் அனைத்து கட்சிகளுக்கும் விதிக்கப்படுவது தானே?”** என நீதிபதி கேள்வி எழுப்பினார். ‘ஆம்’ என்று அரசு தரப்பின் சார்பில் சொல்லப்பட்டது. **“முழுமையாக போக்குவரத்து பாதிக்கப்பட்டால் மக்கள் பாதிக்கப்பட மாட்டார்களா? யாரும் சட்டத்திற்கு மேலானவர்கள் அல்ல. பொதுக்கூட்டம் நடத்தினாலும் சட்டத்திற்குட்பட்டு நடத்த வேண்டும். தலைவராக இருக்கும் நீங்கள்தான் கூட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும்”** என்று நீதிபதி கடுமையாக எச்சரிக்கை செய்தார். **‘சேதப்படுத்தப்பட்ட பொதுச்சொத்துகளுக்கு இழப்பீடு வசூலிக்கப்பட்டதா? இல்லையென்றால் இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட நேரிடும்’** எனவும் நீதிபதி எச்சரிக்கை விடுத்தார்.

**‘கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வர வேண்டாம் என கோரிக்கை விடுத்து மற்றவர்களுக்கு நீங்கள் முன்மாதிரியாக இருக்கலாமே?’** என நீதிபதி அறிவுறுத்தினார். திருச்சி பரப்புரையின் போது விஜய் ரசிகர்களின் செயல்களை புகைப்படமாகவும் காவல்துறை வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அதனை பார்த்த நீதிபதி, **“இவர்கள் இது போன்று உயரமான இடங்களில் ஏறி நின்று ஏதாவது அசம்பாவிதம் நிகழ்ந்தால் யார் பொறுப்பேற்பது? இதனை நீங்கள் ஒழுங்குபடுத்த வேண்டாமா?”** எனவும் நீதிபதி கேள்வி எழுப்பினார். அதன் பிறகும் விஜய் தரப்பு திருந்தவில்லை.

ஊர்வலத்துக்கும், வேன் பிரச்சாரத்துக்கும், பொதுக் கூட்டத்துக்கும், மாநாட்டுக்கும் வித்தியாசம் தெரியாத கும்பலாக அது இருக்கிறது. நூற்றுக் கணக்கானவர்கள் விஜயின் பஸ்ஸை சுற்றி ஊர்வலமாக வருகிறார்கள். பேசும் இடத்தில் பார்க்க வருபவர்களுக்கும், இந்த பஸ்ஸோடு நடந்து வருபவர்களுக்கும் ஏற்படும் தள்ளுமுள்ளு வழக்கமானதாக ஆகிவிட்டது. இவர்களை ஒழுங்குபடுத்தினால், காவல் துறை மீது பாய்கிறார்கள்.

**இந்த களேபரங்கள் எதையும் விஜய் கண்டு கொள்வது இல்லை. அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே மயங்கி விழுகிறார்கள் சிலர். அதைக் கண்டு கொள்ளாமல் பேசுகிறார். ஆம்புலன்ஸ்சில் அவர்களை தூக்கிச் செல்லும் போது, இவர் பஸ்ஸில் கிளம்பி விடுகிறார். அவரது பஸ்ஸை விரட்டி வரும் இரண்டு பைக்குகள் இவரது பஸ்ஸுக்குள் விழுகிறது. அதை குனிந்து பார்த்துவிட்டும் நிற்காமல் புறப்படுகிறார். 50 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மரணத்தின் எண்ணிக்கை முப்பதைக் கடந்த பிறகும் திருச்சியில் இருந்து சென்னை புறப்படுகிறார் விஜய். விமான நிலையத்தில் ஊழியர்களுக்கு செல்பி எடுக்க சிரித்தபடி போஸ் கொடுக்கிறார்.**

**‘நான் வர்றேன்’ என்றவர் ஓடுகிறார். ‘எங்கே விஜய்?’ என்று கரூரில் அவர்களது ரசிகர்களே தேடுகிறார்கள்.**

**நீதிமன்றங்கள் உத்தரவிட்ட பிறகும், அந்தக் கட்டுப்பாடுகளை மீறியதால்தான் இத்தனை உயிர்ப்பலிகள். இத்தகைய ஒழுங்கீனத்துக்கு தரப்பட்ட விலை, 40 உயிர்கள் என்றால் அதற்கு பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்? அவர்களுக்கு மனச்சாட்சி இருக்குமா? ‘கட்சி’ என்பதே கால்ஷீட் ஆகிவிட்டதால், மரணங்களும் சூட்டிங்குகளாக அவரால் பார்க்கப் படுகின்றன. தனது ரோல் முடிந்ததும் ‘பேக்கப்’ ஆவதுதானே வழக்கம்?!**



கரூரில் நடைபெற்ற துயர சம்பவம் குறித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

## ஆம்புலன்ஸை வழிமறித்து ஒட்டுமொத்த

# தமிழகத்திற்குத் தவறான மன ஓட்டத்தைப் புகுத்தியவரே எடப்பாடி பழனிசாமிதான்!

### எதிர்க்கட்சித் தலைவரின் கேவலமான அரசியலை அம்பலப்படுத்தி அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!

**கரூர், செப். 30 -**

**“ஆம்புலஸ்ஸை வழிமறித்து ஒட்டுமொத்த தமிழகத்திற்குத் தவறான மன ஓட்டத்தைப் புகுத்தியவர் எடப்பாடி பழனிசாமிதான்” என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.**



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கரூர் சம்பவத்தில் தமிழ்நாடே துயரத்தில் இருக்க, பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அதிலும் அரசியல் செய்து கொண்டிருக்கிறார். அரசியல் பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கிறது. பேரிடரிலுமா செய்ய வேண்டும்?

''முந்தைய கூட்டங்களின் நிலையை ஆய்வு செய்து, அதற்கேற்ப முழு பாதுகாப்பை அரசு, காவல்துறை தந்திருக்க வேண்டும்” என்கிறார் பழனிசாமி. முந்தைய கூட்டங்களிலிருந்து ஆய்வு செய்த பிறகுதான் அதற்கு ஏற்ப கூடுதல் கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் காவல் துறை போட்டது. உடனே நீதிமன்றத்திற்குச் சென்று த.வெ.க.வினர் முறையிட்டார்கள்.

#### எதிர்க்கட்சித் தலைவரின் உளறல்!

திருச்சி பிரச்சாரத்துக்குக் கடுமையான நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, த.வெ.க. துணைப் பொதுச்செயலாளர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். த.வெ.க சார்பில் ஆஜரான வழக்கறிஞர் “எந்த வழியாக சென்னை திரும்ப வேண்டும். எத்தனை வாகனங்கள் வர வேண்டும் என்றெல்லாம் நிறைவேற்ற முடியாத நிபந்தனைகள் த.வெ.க.வுக்கு விதிக்கப்படுகிறது. கர்ப்பிணிகள், மாற்றுத்திறனாளிகள் வரக்கூடாது என நிபந்தனைகளை விதிக்கிறார்கள். அவர்களை வர வேண்டாம் என நாங்கள் எப்படிச் சொல்ல முடியும்?'' எனக் கேள்வி எழுப்பினார். விஜய் பிரச்சாரத்திற்கு வருபவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு எப்படியெல்லாம் முயன்றது என இதில் இருந்தே பழனிசாமி தெரிந்து கொள்ளலாம்.

இந்த விஷயங்கள் எதையும் அறிந்து கொள்ளாமல் எதிர்க் கட்சித் தலைவர் உளறிக் கொட்டியிருக்கிறார். காவல் துறை நிபந்தனைகள் எதனையும் தவெக பிரசாரத்தில் கடைப்பிடிக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால், அவர்கள் எல்லை மீறி நடக்க எதிர்க் கட்சித் தலைவரின் செயல்பாடுகளும் காரணமாக அமைந்துவிட்டது.

சாலைகளில் பிரச்சார வேனில் நடக்கும் கூட்டங்களில் இதுவரை தமிழ்நாட்டில் இப்படியொரு சம்பவம் நடந்த வரலாறு இல்லை. நடுரோட்டில் பஸ்ஸை நிறுத்தி கூட்டம் நடத்திவிட்டு, அவசரத்திற்கு அவ்வழியே ஆம்புலன்ஸ் வந்தால், அரசாங்கம் இடையூறு செய்கிறது என்று சொல்லி அங்கிருந்த தொண்டர்களை மட்டுமல்ல.. ஒட்டுமொத்தத் தமிழகத்திற்குத் தவறான மன ஓட்டத்தைப் புகுத்தியவர் எடப்பாடி பழனிசாமிதான். ”ஆள் இல்லாமல் ஆம்புலன்ஸ் வந்தால் ஓட்டுநரே நோயாளியாக அனுப்பப்படுவார்” என பழனிசாமி சொன்ன பிறகுதான் அவருடைய கூட்டங்களில் அடுத்தடுத்து ஆம்புலன்ஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டன. ஆம்புலன்ஸ் ஓட்டுநர்கள் தாக்கப்பட்டனர்.

பழனிசாமி போட்ட புதிய அரசியல் எண்ணத்திற்கு ஆட்பட்டுத்தான், த.வெ.க. கூட்டத்தில் ஆம்புலன்ஸ்கள் வந்தபோது அதை அனுமதிக்க மறுத்து, தாக்குதல் நடத்தினார்கள் த.வெ.க. தொண்டர்கள். தொண்டர்களை இந்த மனநிலைக்கு மாற்றிய பழனிசாமியும் தார்மீக பொறுப்பேற்க வேண்டியவர்தான்.

#### நிபந்தனைகளை கடைப்பிடிக்கவில்லை!

காவல்துறை விதித்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காத காரணத்தால் ஏற்பட்ட துரதிர்ஷ்டமான சம்பவம் இது. சம்பவம் நடந்த உடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துரிதமாகக் களத்தில் இறங்கி நடவடிக்கை மேற்கொண்டார். அமைச்சர்களை கரூருக்கு அனுப்பினார்; உடனடியாகத் தலைமைச் செயலகத்தில் அமைச்சர்களையும் அதிகாரிகளையும் கலந்தாலோசித்து நிவாரண உதவிகளையும் விசாரணை ஆணையத்தையும் அமைத்தார். நள்ளிரவிலும் கரூருக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுடன் உடன் இருக்கிறார். தி.மு.க.வின் அனைத்து நிகழ்ச்சிகளும் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. துபாயிலிருந்து துணை முதல்வர் உதயநிதி அவசரமாகத் தமிழ்நாடு திரும்புகிறார்.

தூத்துக்குடி துப்பாக்கி சம்பவத்தை டிவியில் பார்த்துக் கொண்டிருந்த பழனிசாமியை போல் இல்லாமல், உடனே களத்தில் இறங்கிச் செயல்பட்டார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஆனால், பழனிசாமியோ சிறிது கூட மனசாட்சியே இல்லாமல் முதலமைச்சர் மீதும் காவல்துறை மீதும் பழி போடுகிறார்.

அனுமதி தராவிட்டால் அதிலும் அரசியல் செய்வது, அனுமதி அளித்தால் அந்த நிபந்தனைகளை மீறுவது, நிபந்தனைகளை மீறும் ரசிகர்களை ஊக்குவிப்பது என தவெக மோசமான அரசியலுக்கு மாறி வருகிறது. அதனை அதிமுக ஆதரிக்கிறது. நகருக்கு வெளியே பிரச்சாரத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று காவல்துறை கேட்டுக் கொண்டால், முடியாது நாங்கள் கூட்டத்தைக் காட்டுவதற்கு முட்டுச் சந்துதான் தேவை என்று அப்பாவி பொதுமக்களை அலைக்கழிப்பதுதான் பழனிசாமி போன்றவர்களின் கேவலமான அரசியலாக இருக்கிறது.

தவெக கூட்டத்திற்கு முழுமையான பாதுகாப்பு காவல்துறையால் வழங்கப்பட்டது. அதனை த.வெ.க. தலைவர் விஜய்யே பிரச்சாரத்தில் ஒப்புக்கொண்டு பேசும் காட்சியை எல்லாம், வழக்கம் போலவே டிவியில் பார்க்கும் எடப்பாடி பழனிசாமி பார்க்கவில்லையா?

#### மக்களுக்கான நல்ல அரசியலை செய்யுங்கள்!

ஆளுங்கட்சியின் மீது பழி போடவும் அரசியல் செய்யவும் எந்தக் காரணமும் இல்லை என்றால் மக்களுடன் நின்று மக்களுக்குத் தேவையானதைச் செய்து கொடுத்து நல்ல அரசியலைச் செய்யுங்கள். அதை விடுத்து இதுபோன்ற மோசமான நாடகங்களை அரங்கேற்றி அவற்றுக்கு ஆளுங்கட்சியின் மீது பழி போட்டு அரசியல் செய்வது மனசாட்சியே கிஞ்சித்தும் இல்லாதவர்கள் செய்யும் செயல். மக்களின் மனங்களின் மீது அரசியல் செய்யுங்கள். பிணங்களின் மீது அல்ல. அரசியல் லாபத்திற்காக எதிர்க்கட்சித் தலைவர் வதந்தியைப் பரப்பும் நோக்கோடு பேசுவது தமிழ்நாடு அரசு இதுவரை கண்டிராதது. எடப்பாடி பழனிசாமி பொறுப்பற்ற முறையில் மக்கள் மத்தியில் வதந்திகளையும், கற்பனைக் கதைகளையும் பரப்பித் தனது சுய அரசியல் ஆதாயம் தேடுவது அரசியல் அநாகரிகம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா வாசிங்டன் டி.சி.யில்

# தந்தை பெரியார் பிறந்தநாள் கருத்தரங்கம்!

### கழக அயலக அணியினர் பங்கேற்றனர்!

*வாஷிங்கடன், செப். 30-*

*தி.மு.க. அயலக அணி (மத்திய) மண்டலம் அமெரிக்கா மற்றும் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் அமெரிக்கா இணைந்து நடத்திய தி.மு.க. முப்பெரும் விழா மிகச் சிறப்பாக அமெரிக்கா வாசிங்டன் DC யில் ஹெர்ன்டன் நகரில் 20.09.2025 அன்று மாலை நடைபெற்றது.*

*இவ்விழாவில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் தொண்டுகளைப் பற்றி வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கத்தின் மேனாள் தலைவர் பேராசிரியர் அரசு செல்லையா, பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழினத்தை அரசியல்மயப்படுத்தியதையும், தமிழ்நாடு எனப் பெயர் மாற்றியதையும், பற்றியும் அயலக அணி (கி) துணை அமைப்பாளர் திணை இரவி, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழ்நாட்டிற்கும் செய்தச் சாதனைகளை பற்றி அயலக அணி கிழக்கு மண்டல அமைப்பாளர் நியுசெர்சி பாலா, தி.மு.க. முப்பெரும் விழாவின் சிறப்பையும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொண்டுகளை பற்றியும் திராவிடர் கழகப் பொது செயலாளர் வடலூர் துரை சந்திரசேகரன் மிகச் சிறப்பாகச் சிறப்புரையாற்றினர்.*

*இந்த விழாவை தி.மு.க. அயலக அணி (ம) துணை அமைப்பாளர் ம.வீ.கனிமொழி மற்றும் பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டத்தை சேர்ந்த சுபாசு அவர்களும் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்தனர். இவ்விழாவில் அயலக அணியைச் சேர்ந்த கமல், யோக்கியராஜ், பிரபாகரன், தமிழ்சங்கத்தை சேர்ந்த எழில் வடிவன், அறிவுபொன்னி, இலக்கணன், எயினி, சுந்தரி, ஜனனி, இலக்கியா, இனியா, மேரி, ஆகியோர் கலந்து கொண்டனர்.*



புதுக்கோட்டை முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கத்தில், அறிஞர் அண்ணா மிதிவண்டிப் போட்டியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா தலைமையில் 27.09.2025 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் து.செந்தில்குமார் மற்றும் அரசு அலுவலர்கள பலர் உள்ளனர்.